1990 மார்ச் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

அந்தப் பகுதிகளுக்குச் சென்று அவர்களுடைய தேவைகளை அறிந்து அந்தத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. எனவே, அகதிகளாக வருகின்றவர்களைப் பற்றி பிரச்சினை இல்லை. ஆனால் அமைதியைக் குலைக்கக்கூடிய அளவுக்கு எந்த நிலைமை ஏற்படுவதையும் தமிழ்நாடு அரசு ஏற்காது. அப்படி ஒரு நிலைமை ஏற்பட்ட பிறகு இவர்களை ஏன் அனுமதித்தீர்கள் என்று அரசைப் பார்த்து நிச்சயமாகக் கேட்பீர்கள். எனவேதான் ஒரு போராளிக் குழு இங்கே வர, அதைத் தொடர்ந்து இன்னொரு போராளிக் குழு அவர்களைத் தாக்க வர தமிழ்நாடு ஒரு அமளிக் கூடமாக ஆவதை இந்த அரசு விரும்பவில்லை.

மத்திய அரசிலே ஒரு அதிகாரி, வந்தவர்கள் அத்தனை பேரும் அகதிகள்தான்; போராளிகள் அல்ல என்று குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். அந்தக் காலத்திலேயிருந்து எனக்குத் தெரியும், ராஜீவ் காந்தி ஆட்சிக் காலத்திலும் சரி, இன்று பிரதமர் மாண்புமிகு வி. பி. சிங் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் சரி, சில அதிகாரிகள் இந்த இலங்கைப் பிரச்சினையில் சடுகுடு விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

(ஆ) **சட்ட விரோதமான ஆயுதப் பயிற்சி தமிழ் நாட்டில் சில இடங்களில் அளிக்கப்படுவதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.**

திரு. உ. ரா. வரதராசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாலைப் பத்திரிகையில் வெளி வந்திருக்கக்கூடிய ஒரு முக்கியமான செய்தியைப் பற்றி தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விழைகிறேன். தமிழ்நாட்டில் சட்டவிரோதமாக ஆயுதப் பயிற்சி தரப்படுகிறது என்ற ஒரு குற்றச்சாட்டை பாரதீய ஜனதா கட்சி சார்பில் அவர்கள் தலைவர் ஒருவர் கூறியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மதுரை, இராமநாதபுரம், தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் சட்ட விரோதமாக ஆயுதப் பயிற்சி முகாம்கள் இயங்கி வருகின்றன. அரசியல் கட்சிகள் உதவியோடு சில அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் இந்த ஆயுதப் பயிற்சிக்கு உதவி செய்கிறார்கள். தமிழ் நாட்டில் குழப்பம் ஏற்படுத்துவதற்காக இங்குள்ள இளைஞர்களுக்கு ஆயுதங்கள் கடத்திக்கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்று எல்லாம் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது சொன்னது போல், இலங்கையில் இருக்கக்கூடிய போராளிக் குழுக்கள், அங்கே அவர்கள் நடத்துகின்ற சகோதரச் சண்டை அதனுடைய எதிரொலி இங்கே எழுவதற்கும் இங்கேயும் அந்தச் சண்டைகள் தொடர்வதற்கான ஒரு நிலைமை இங்கே இன்றைக்கு ஏற்பட்டு இருக்கின்றது.

[திரு. உ. ரா. வரதராசன்] [1990 மார்ச் 21

10-15 மணி

இராமநாதபுரம் சோதனைச் சாவடியிலே நடந்த நிகழ்ச்சிகளெல்லாம்கூட நமக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, தமிழ் நாட்டிலே சட்ட விரோதமான ஆயுதங்களைக் கொண்டு வருவது, சட்ட விரோதமான ஆயுதப் பயிற்சிகள் நடத்துவது இவற்றையெல்லாம் தடை செய்வதற்கும், போராளிக் குழுக்கள் எந்தப் போராளிக் குழுவாக இருந்தாலும்கூட, தமிழ்நாட்டிலே அவர்கள் ஆயுதம் தாங்கி உலவுவதற்கு இல்லாத வகையிலே அவர்களிடமிருந்து ஆயுதத்தைப் பறிமுதல் செய்வதும் தமிழக மக்களுடைய அமைதிக்கு மிக மிக அவசியமானது என்பதைக் குறிப்பிட்டு, இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், கவலையோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எழுப்பிய அந்தப் பிரச்சினைக்குப் பதிலாக நம்முடைய நண்பர் வரதராசன் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினை அமைகிறது என்றே நான் கருதுகின்றேன். இவ்வளவு கட்டுப்பாடாக, கப்பல்களிலே கூட வந்து இறங்கக் கூடாது என்று அரசு கண்டிப்பாக இருந்தும் கூட இது போன்ற செய்திகள், நிகழ்ச்சிகள் நடைபெறுவதாகப் பத்திரிகைகள் அறிவிக்கின்றன. அது போல, எந்த அரசியல் கட்சியும் அத்தகைய போராளிக் குழுக்கள் இங்கே நடமாடவோ அல்லது அவர்கள் பாசறைகளை அமைத்துப் பயிற்சி பெறவோ துணை புரிவதாகத் தெரியவில்லை. பத்திரிகையிலே வந்த செய்தி உண்மையா என்று அறிய நம்முடைய காவல் துறையினுடைய ஒற்றர்கள் விரைந்து செயல்படுவார்கள் என்று நம்புகின்றேன். எந்த ஒரு பயிற்சி முகாமும், வெளிநாடுகளிலே உள்ளவர்களுக்காக இங்கே நடைபெறுவதை இப்போதுள்ள சூழ்நிலையிலே இந்த அரசு அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) விடுதலைப் போராட்ட வீரர் ஆச்சாரிய நரேந்திர தேவ் அவர்களுக்கு ஈரோட்டில் திருவுருவச் சிலையும் நினைவுச் சின்னமும் நிறுவுவது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்; மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சுதந்திரப் போராட்ட காலத்திலே, நாமெல்லாம் இந்த மாதிரி ஒரு சபையை நடத்துவதற்கு பாக்கியம் கிடைப்பதற்காக, ஆச்சாரிய நரேந்திர தேவ் எத்தனையோ போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அவர் புரட்சிகரமான போராட்டத்தை நடத்தியவர். போராட்டங்களிலே பலவிதமான போராட்டங்கள் உண்டு. மைல்டா, அதாவது மிதவாதம், அபிதமிதவாதம் என்று சொல்வார்கள். இப்படிப்